Uttra Thunai

Ayyappa · Tamil

விருத்தம்
இனிமெலும் உம்மை ஸ்துதிப்பதுமல்லாது
வேறு இஷ்ட குல தெய்வமுண்டோ
எவ்வேளை உன் கிருபை கிடைக்குமென்றே

காத்திருக்கும் என் ஹ்ருதய ஸாதகத்தை
தனது குஞ்சென்பதும் அரிந்து
கருணாம்ருதமும் தந்து பாலிப்பதற்க்கு
நீர் தாமதித்தால் இச்சிசு ஸஹிக்குமோ

உமது செயல் நானும் அரியாததுமுண்டோ
மநதினில் வெறுப்போ,
தென் மதுரையில் அதிகாரமான நின் பெருமைதானோ
ஜனஸமூஹ மஹாமேருதங்கரந்தாபுரியில்
சிந்தை பூரித்து வாழும் என் அந்தரங்க தெய்வமே,

மன மோஹன ரூபனே, மன மோஹன ரூபனே
திருமால் ஹரன் பெற்ற செல்வக்குமாரன் இதி
ஜெய வீரமணிகண்டனே, ஜெய வீரமணிகண்டனே

பல்லவி:

உற்ற துணை உனையன்றி வேறு யாருண்டு
பெற்றவன் நீ எனைக்காத்து வருவாயப்பா
(உற்ற)

அனுபல்லவி:

அறியாமல் நான் செய்த பிழை யாவுமே
(அதை) பெரிதாக கருதாத கருணை தெய்வமே
(உற்ற)

சரணம்:

ஆனந்தமாய் சரண கீதம் பாடுவேன்
அழகாக நீ அதற்கு தலையாட்டுவாய்

எருமேலி பேட்டை துள்ளி ஆட்டமாடுவேன்
எனையாட்டிவைக்கும் நீ அதற்கு தாளம் போடுவாய்

இருமுடி தலை தாங்கி மலையேறுவேன்
வழி காட்டும் குலவிளக்காய் கூட வருவாய்

ஐயா ஐயா என்று அழுதேனே நான்
(எங்கள்) கண்களில் நீர் துடைத்து கரை ஏற்றுவாய்
(உற்ற)